1986 மே 6]

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரஷ்யாவிலே 5 ஆம் வகுப்பு முதல் ராணுவக் கல்வியிலே பயிற்சியும் கொடுத்து கற்றுக் கொடுக்கப்படுவதாக ரஷ்யா சென்று வந்த என் நண்பர்கள் சொன்னார்கள். இப்போது எப்படி நாம் தொழில் கல்வியையும், அதன் பயிற்சியையும் பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 வகுப்புகளுக்கு கற்றுக் கொடுக்கிறோமோ, அதுபோல மேல்நிலைப் பள்ளிகளிலிருந்தாவது அந்த ராணுவக் கல்வியை இந்த ஆண்டிலிருந்தாவது தொடங்கி பயிற்சி கொடுக்க அரசு முன்வருமா அல்லது இனியாவது அதற்கான பரிசீலனையை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ரஷ்யாவிலே இருப்பதில் எல்லாம் அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்து இங்கே பின்பற்ற முடியாது. வேண்டுமானால் முழுவதுமாக பின்பற்றினால் சரியாக இருக்கும்.

Grant to Anglo-Indian Schools.

* 675 (Q. No.—3850) Thiru G. K. FRANCIS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether there are proposals with the Government to meet the present enhanced fees levied in Anglo-Indian Schools by suitably increasing tee compensation Grant to Anglo-Indian Students;

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளுக்கு, அவைகள் 1982-83 ஆம் ஆண்டில் ஆங்கிலோ இந்திய மாணவர்கள் அல்லாத ஏனைய மாணவர்களிடம் இருந்து வசூல் செய்த படிப்பு கட்டண வீதத்தில் 1985-86-ம் கல்வி ஆண்டிலிருந்து இப்பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ-இந்திய மாணவர்களுக்கான படிப்பு கட்டண இழப்பீட்டு மான்யம் (Fee Compensation Grant) வழங்க அரசாணை நிலை எண் 348, கல்வி, நாள் 18—3—1986-ல் அரசு உரிய ஆணைகள் வெளியிட்டுள்ளது.